# காசும் பொன்னும் மணியும்

(ஸ்ரீ.உ.வே.வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி)

ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுல் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவர் நம்மாழ்வார். அவரருளிச் செய்த திருவாய்மொழி அருளிச்செயலில் தலையானது. ''வேதாதிகளில் பௌருஷ மானவ கீதா வைஷ்ணவங்கள்போலே இது அருளிச்செயலில் ஸாரம்'' என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியும், ''உண்டோ சடகோபர்க்கொப்பொருவர் உண்டோ திருவாய்மொழிக்கொப்பு' என்ற உபதேச ரத்தினமாலை ஸ்ரீஸூக்தியும், ''ஆழ்வாருக்குப் பின்பு நூருயிரம் கவிகள் போருமுண் டாய்த்து. அவர்கள் கவிகளோடு கடலோசை யோடு வாசியில்லை' என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியும், ''பெருமானடிசேர் வகுளா பரணன் ஓராயிர மறையின் தமிழில் ஒரு சொல் பொறுமோ உலகிற்கவியே'' என்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வசனமும், ''குறுமுனிவன் முத்தமிழும் என் குறளும் நங்கை சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்'' என்ற திருவள்ளுவர் வசநமும், ''எங்கள் தென்குருகூர்ப்புனிதன் கவி ஓர் பாதத்தின்முன் செல்லுமே தொல்லை மூலப் பரஞ்சுடரே'' என்ற கம்பர் வாக்கும், ''உருபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும் வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதரும் செய்தமிழ் ஆரணமே'' என்ற எம்பெருமானுர் ஸித்தாந்தத்தைக் காட்டும் அமுதனுர் திருவாக்கும் இங்கே அநுஸந்தேயங்கள். இப்படி சீர்மைமிக்கு விளங்கும் திருவாய்மொழி, தன்னிடம் ஆயிரமாயிர மான அர்த்தரத்நங்களை அடக்கிக் கொண்டிருக்கும் பேழையாகும்.இதனை ரஸிகப்பெருமக்களுக்கு எடுத்துக்காட்டுமது ஈடு முப்பத்தாருயிரமாம் நம்பிள்ளை திவ்யஸூக்தி. அர்த்தரத்நங்கள் பலவற்றுள் ஒன்றை யநுபவிப்போமிங்கு.

''காசை யிழந்தவனுக்கும், பொன்னை யிழந்தவனுக்கும் ரத்நத்தை யிழந்தவனுக்கும் துக்கம் ஒத்திராதிறே'' என்று ''ஆடியாடி'' திருவாய்மொழி அவதாரிகையில் ஈட்டு திவ்யஸூக்தி அமைந்துள்ளது. நம்பிள்ளைக்கு பூர்வர்களான நஞ்ஜீயரும், பிள்ளானும் தங்கள் வ்யாக்யாநங்களான ஒன்பதிஞுயிரப்படி, ஆருயிரப்படியில் இவ் வர்த்தத்தைக் காட்டிற்றிலர். நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட அதனுல் மாறன் மறைப்பொருளை இருபத்து நாலாயிரப்படியில் சொன்ன பெரியவாச்சான்பிள்ளை இவ்வர்த்தத்தைக் காட்டியருளுகிருர். ஆகையால் இது நம்பிள்ளை ப்ரஸாதித்த சீரிய அர்த்தமாகும். இதனை விளக்கமாக அநுபவிப்போமாக.

காசாவது விபவாவதாரம்; பொன்ஞவது அர்ச்சாவதாரம்; மணியாவது விபவாவதாரத்தையும் தத்ப்ரதி நிதியான அர்ச்சாவதாரத்தையும் அநுபவிக்கிற அடியார்களான பாகவதர்கள். இங்கே, ''காசினை'' (பெரிய.திரு.7–10–4), ''செம்பொனேதிகழும்'' (திருவாய் 1–10–9), ''செழுமாமணிகள்'' (திருவாய் 5–8–9) என்ற பாசுரங்கள் அநுஸந்தேயங்கள். புருஷார்த்தங்களில் ஸர்வேஶ்வரனுடைய விபவாவதாரத்தைப் பற்றின அநுபவம் உயர்ந்தது. அர்ச்சாவதாராநுபவம் மிக உயர்ந்தது. பாகவதாநுபவம் மிகமிக உயர்ந்தது. எல்லைநிலமானது என்றபடி.

இவ்விஷயத்தை ஆழ்வார் பாசுரங்கொண்டு நாமனுபவிப்போம்.

''பெருநிலங் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன்'' (1–3–10), ''அஞ்சிறைய மடநாராய் ... என்விடுதூதாய்'' (1–4–1), நம்பியைத் தென்குறுங்குடிநின்ற' (1–10–9), ''வாயுந்திரையுகளும்... நாராய்...நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே'' (2–1–1), ''அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ'' (2–3–10), ''ஆடி ஆடி அகம் கரைந்து ...வாடிவாடும் இவ்வாணுதலே'' (2–4–1) என்ற திருவாய்மொழிப் பாசுரங்கள் ஆறினுடைய அர்த்தத்தை அநுபவித்தால் இது விளங்கும்.

ஆழ்வார் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர். மதியான ஜ்ஞானத்துக்கநுகுண மாகத் தாமான தன்மையிலும், நலமான ப்ரேமத்துக்கநுகுணமாகப் பிராட்டியான தன்மையிலும் பாசுரமருளிச்செய்வர். ''ஜ்ஞானத்தில் தன்பேச்சு, ப்ரேமத்தில் பெண் பேச்சு'' என்றிறே ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தி. கீழே காட்டப்பட்ட ஆறு பாசுரங்களில் முதலாவது, மூன்றுவது, ஐந்தாவது பாசுரங்கள் ஆழ்வாரால் தாமான தன்மையிலும், இரண்டாவது, நான்காவது, ஆருவது பாசுரங்கள் நாயிகையான தன்மை யிலும் அருளிச்செய்யப்பட்டவைகளாகும்.

இப்படி ஸ்தலநிர்தேஶமாயிற்று. இனி ப்ரக்ருத விஷயாநுபவத்திலே இழிவோம்.

''பெருநிலம் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன்'' (1–3–10) என்று விபவாவ தாரமான ஸ்ரீதிரிவிக்ரமனை அநுபவிக்க ஆசைப்பட்டார். அது கழிந்த காலவ்ருத்தாந்தமாகையாலே ஆழ்வார் ஆசைப்பட்ட காலத்தில் அவருக்கு அவ்வநு வபம் கிடைத்திலது. அந்த துக்கத்தாலே ஆழ்வார் நாயிகாபாவம் தலையெடுத்து பக்ஷி களைத் தூதுவிட்டார் அஞ்சிறைய மடநாரை யில். ''தென்குறுங்குடி நின்ற .. எம்பிரானை என் சொல்லி மறப்பனோ'' (1–10–9) என்ற விடத்தில் மாநஸாநுபவமாத்ரமே யாய்த்து. பாஹ்யாநுபவத்தை ஆசைப்பட்டு, அது கிடையாமையாலே மிகவும் துக்கிதராய் ஓர் பிராட்டிதஶையைப் ப்ராப்தராய், ஆற்றுமை யாலே நோவுபடுகிருளாய், லீலோத்யாநத்திலே புறப்பட்டு, அங்கே உள்ள நாரை முதலான பதார்த்தங்களும் பெருமானை விட்டுப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபடுகிருர் வாயுந்திரையுகளில். இது அர்ச்சாவதாராநு பவ அலாபத்தால் வந்த க்லேஶமிறே. ''ஆய அறியாதவற்ருேடு அணைந்தழுத மாறன்'' என்று மணவாளமாமுனிகளும், ''காற்றும் கழியும் கட்டி அழ'' என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனுரும் அருளிச் செய்தார்களிறே. ஊனில் வாழுயிரே நல்லைபோ...என்னம்மான் தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்'' (2–3–1) என்று பரிபூர்ண ப்ரஹ்மாநுபவத் தைப் பெற்று, ஆழ்வார் எல்லை நிலமான பாகவதாநுபவத்தை ''அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ (2–3–10) என்று ஆசைப்பட்டார். இவர் ஆசைப்பட்ட அடியார்கள் நித்யஸூரிகளிறே. அவ்வநுபவம் காலாந்தரத்திலே தேஶாந் தரத்திலே கிடைக்குமதுஒன்றுஆகையாலே இப்போதே இங்கேயே என்றவர்க்குக் கிடைத்திலது. அதனுலே மிகவும் துக்கிதராய் நாயிகாபாவம் தலையெடுத்து தாய்ப் பாசுரமாக அருளிச் செய்கிருர் ''ஆடியாடி'' என்று. இம் மூன்றிடங்களிலும் துக்கம் ஒத்திராது என்பதனை நாம் காணலாம்.

அஞ்சிறைய மட நாரையில் நாரையைத் தூதுவிட க்ஷமரானர். வாயுந்திரையுகளில் அந்த நாரைக்குமாகத் தாம் அழுதார். ஆடியாடியில் தன் தஶையைத் தன் வாயாலே சொல்லமாட்டாதே தாய்ப் பாசுரமாகச் செல்லுகிறது. ஆடியாடி யில் ஆழ்வார் மோஹங்கதரிறே. இப்படியிறே இம்மூன்றிடங்களில் துக்க தாரதம்யம். இதுக்கு அடி இழந்த வஸ்துக்களின் தாரதம்யமிறே.அஞ்சிறையமடநாரையில் விபவாநுபவத்தையிழந்த துக்கம். இதிறே காசையிழந்தபடி. அர்ச்சாவதாராநுபவத்தை யிழந்த துக்கம் வாயுந்திரையுகளில். இதிறே பொன்னையிழந்தபடி. காசும் பொன்னும் இரண்டும் ஒன்றேயாயினும் உத்கர்ஷாப கர்ஷ ஹேதுவான மாற்றில் தாரதம்யம் உண்டு.அப்படியே விபவத்துக்கும் அர்ச்சைக்கும் ஸௌலப்யத்திலே தாரதம்ய முண்டு. அன்றிக்கே காசு என்றது அல்பகாலீனத்வத்தைப்பற்றவுமாம். விபவம் காதாசித்கம். அர்ச்சாவதாரம் ஸார்வ காலீனமிறே. ''பெருநிலங் கடந்த நல்லடிப் போது அயர்ப்பிலன்' என்று அவதாரத்திலே அநுபவிக்க ஆசைப்பட்டு அது பெருமையாலே வந்த க்லேஶம். ''அது காலாந்தரத்திலேயன்றே. நாம் பிற்பாடரா னேம்'' என்றுறியிருக்கலாம். ''நம்பியைத் தென் குறுங்குடிநின்ற'' என்ற அர்ச்சை தான் அங்ஙனன்றிக்கே பிற்பாடர்க்கும் இழக்க வேண்டாதபடி ஸர்வர்க்கும் ஸர்வதா முகக்கொடுக்குமிடமிறே. இது பெருமை யாலே வந்த ஆற்றாமையாகையாலே வாயுந்திரை ஆற்றாமை விஞ்சியிருக்கும். அஞ்சிறையமடநாரையில் தூதுவிட தரிப்புண்டாய், வாயுந்திரையுகளில் பிறர்க்கு மாகத் தாம் நோவுபடுமது ஆற்றாமையின் கனத்தையே காட்டுமிறே. ''அடியார்கள் குழாங்கள் உடன் கூடுவது என்று கொலோ'' என்று நித்யஸூரி பரிஷத் அநுபவத்தை ஆசைப்பட்டு அது கிடையாமையால் வந்த பரமக்லேஶமிறே ஆடியாடியில்.

இதிறே மணியையிழந்தபடி. செழுமாமணிகளிறே. செழுமாமணிகளாகி ரூர்–திருமழிசைப்பிரான் போல்வார் என்றிறே ஈடு. பெருமான் தனக்கும் ப்ராணபூதரிறே நித்யஸூரிகள். ப்ராணபூதர் என்றது ''ஜ்ஞாநீ து ஆத்மைவ'' ''அறிவார் உயிரானய்'' (6–9–8) என்றதைப்பற்ற. ''என்னதுன்னதாவி யிலே அறிவார் ஆத்மா என்று அவன் மதம் தோன்றும்'' என்றிறே ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தி. ஆக ஆடியாடியில் ஆற்றாமை கரைபுரண்டிருக்கும் இழந்தவஸ்துவின் கௌரவத்தாலே என்றதாயிற்று.

ஆக ஆழ்வார் திருவுள்ளம், விபவாநு பவத்தைப்பற்ற அர்ச்சாநுபவம் ஶ்ரேஷ்ட மாய், அதனையும் பற்ற பாகவதாநுபவம் பரமஶ்ரேஷ்டமாய் ஸீமா பூமியாய் இருக்கு மென்று நாமறிந்தோம்.

பாகவதர்கள் ஶேஷிகள் என்பதனை 'பயிலும் சுடரொளி''யிலும், பாகவதர்கள் ப்ராப்யர்கள் என்பதனை ''நெடுமாற்கடிமை'' யிலுமிறே ஆழ்வார் அறுதியிட்டது. நாயனரும் ஆசார்யஹ்ருதயத்திலே ''பயிலும்'' பதிகத்தை ஜீவாத்மஸ்வரூப பரமாகவும், ''நெடுமாற்கடிமை'' பதிகத்தை ப்ராப்யபரமாகவுமிறே எடுத்துதாஹரித்தது. ஸ்ரீமதுரகவியாழ்வாரும், இவ்விரண்டு திருவாய்மொழிகளையுமிறே ஆசார்யருசி பரிக்ருஹீதார்த்த ப்ரதிபாதகமாகக் கொண்டு சரமபர்வ நிஷ்டரானது. ஆக பாகவதாநு பவமே பரமப்ராப்யம் என்றபடி.

**ஆழ்வார் திருவடிகளே ஶரணம்.**